[2004 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா எண் 89, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

89—

மாணவர் விடுதி

***7534–திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, எஸ். புதூர் மேல்நிலைப் பள்ளி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

திருப்பத்தூர் தொகுதி, வி. புதூரில் இயங்கிவரும் மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்ட 23–3–2002 அன்று ஆணையிடப்பட்டு, 2–8–2003 அன்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, புதிய கட்டடத்தில் தற்போது விடுதி செயல்பட்டு வருகிறது. எஸ். புதூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஏதும் வாடகைக் கட்டடத்தில் செயல்படவில்லை.

திரு. கே.கே. உமாதேவன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் சம்பந்தி என்று சொல்லிக் கொண்டு, 5 ஆண்டுக் காலம் ஆட்சி நடத்திய கருணாநிதி ஆட்சிக் காலத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக எதையும் செய்யாத கருணாநிதி ஆட்சிக் காலத்தில், முடிந்துபோன அந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதைப்போல, புரட்சித் தலைவியினுடைய புனிதமான ஆட்சியில், 3 ஆண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 350–க்கு மேற்பட்ட அரசினர் விடுதிகளைக் கட்டிக் கொடுத்து, இந்த ஆண்டு 100 விடுதிகளைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் எனது தொகுதியில் எஸ். புதூரில் அரசினர் விடுதி கட்டிக் கொடுத்த அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும் எனது தொகுதி மக்களின் சார்பிலும் கோடானு கோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

2004 ஜூலை 30]

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல, இந்தச் சட்டமன்றத்திற்கு வராத சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள், தேர்தல் நேரத்தில்தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களைத் தனது சம்பந்தி என்று சொல்வார்; தேர்தல் முடிந்தவுடனே, அதற்கு அப்புறம் அவர் தனது குடும்ப மக்களைப்பற்றித்தான் ஒரே சிந்தனையில் இருப்பார். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் இயங்கி வருகின்ற 1,102 மாணவ மாணவியர் விடுதிகள் அனைத்தும், சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் கழித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், சொந்தக் கட்டடமாக மாற்றப்பட்டுள்ளன. அந்தப் பெருமை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாடு முதல் மாநிலம் என்ற இலட்சியத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும் என்பதை இந்த அவையின்மூலம் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மகாலிங்கம்

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதி ஆண்டில், ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாகப் புதிதாக மாணவர் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற விடுதிகளில், 100 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 90, திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.